Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

11.07.2018

## விடா முயற்சியே வெற்றி தரும்

## தி.மலை சண்முகா கல்லூரியில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் பா.செந்தில் குமார் பேச்சு

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கவிழாவில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் முனைவர் **பா.செந்தில் குமார்** கலந்து கொண்டு வகுப்புகளை தொடங்கி வைத்துப் பேசினார்.

மாணவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்மறை எண்ணங்களை தொடக்கத்திலேயே களைந்தெறிய வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். மேலும், சினம் கொடியது என்றும் பிறர் துன்பத்தில் இன்பம் காணக்கூடாது என்றும் கோபப்படக்கூடாது என்றும் விளக்கியுரைத்தார். பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வருகிறபோது நிறைய மாற்றங்கள் ஏற்படும் என்றும் பருவ மாற்றம் தவிர்க்க இயலாதது என்றும் அதை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்றும் குறிப்பிட்டார். படிப்பில் கவனம் செலுத்தி மதிப்பெண் பெறுவதோடு வாழ்க்கையிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து பெற்றோர்க்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை செவ்வனே செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவிற்கு கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்** முன்னிலை வகித்தார். பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்**, முன்னாள் தலைவர் **பி.இராமச்சந்திர உபாத்தியாயா**, துணைத்தலைவர் **ஜி.புல்லையா**, இணைச்செயலர் **டி.ஏ.எஸ்.முத்து**, கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடைப்பன்** ஆகியோர் வாழ்த்துதலோடு நடைபெற்ற இவ்விழாவில் திருமதி. **டி.கே.பி.கலைமணி**, திருமதி. **இராஜகுமாரி அம்மாள்**, திருமதி. **சி.சசிகலா** உள்ளிட்ட அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார். துணைமுதல்வர் **கோ.அண்ணாமலை** நன்றியுரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **இரா.சங்கர்** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

இவ்விழாவில் புதிதாக முதலாமாண்டில் சேர்ந்துள்ள மாணவர்களும் பெற்றோர்களும் உறவினர்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

தாளாளர்


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) மற்றும் 12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி,
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்றது. (ISO 9001 : 2015 தரச்சான்று பெற்றது)
மணலூர்பேட்டை சாலை, திருவண்ணாமலை- 606 603.
நாள் : 11.07.2018
புதன்கிழமை
22
முதலாமாண்டு வகுப்புகள்
தொடக்க விழா
சிறப்பு விருந்தினர்



சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) மற்றும் 12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி,
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்றது, (ISO 9001 : 2015 தரச்சான்று பெற்றது)
மணலூர்பேட்டை சாலை, திருவண்ணாமலை- 606 603.
22
முதலாமாண்டு